**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 15/2016**

**வாதி தரப்பு சாட்சி-3 அன்புராஜ் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச்** கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 15.07.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அன்புராஜ் | கிராமம் | கீழப்பகுதி |
| த/பெ / க/பெ. | பழனியப்பன் | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுக்கா | கடவூர் | மதம் | |
| ஜாதி | | வயது | 37 |

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. நான் கீழப்பகுதி கிராமத்தில் கடந்த 1 வாரமாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். தாவா 1 ம் அயிட்ட சொத்தின் சர்வே எண் 712/9 யார் பெயரில் உள்ளது என்றால் காளியப்ப பண்டாரம் மகன் பெரியசாமி பெயரில் பட்டா உள்ளது. பின்னிட்டு வாதி சண்முகம் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி பெயரில் உள்ள பட்டா எண் 778 ஆகும். அதன் விஸ்தீரணம் 34 சதுர மீட்டர் ஆகும். சர்வே எண் 712/9 ன் பழைய சர்வே எண் 421/3 ஆகும். தாவா 2 ம் அயிட்ட சொத்து சர்வே எண் 712/10 சாமியப்பன் பிள்ளை மகன் சண்முகம் பெயரில் உள்ளது. அதன் பட்டா எண் 645 விஸ்தீரணம் 61 சதுர மீட்டர் ஆகும். சர்வே எண் 712/10 ன் பழைய சர்வே எண் 421/3 ஆகும். பட்டா எண் 778 மற்றும் 645 இரண்டும் சாமியப்பபிள்ளை சண்மகம் பெயரில் தனிப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான்.

2) சர்வே எண் 712/9 மற்றும் சர்வே எண் 712/10 ற்கு பிரதிவாதிகள் பெயரில் எப்போதாவது பட்டா இருந்ததா என்றால் இல்லை. சர்வே எண் 712/9 மற்றும் 712/10 இரண்டும் கீழப்பகுதி கிராமத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டதுதான். வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டதுதான். மேற்படி ஆவணத்தில் பழைய சர்வே எண் குறிப்பிடப்படவில்லை.

அளவுகள் சரியாக உள்ளது. வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 மனைவரி தோராய பட்டாவாக இருந்து, தற்போது கணினி பட்டாவாக மாற்றப்பட்டது என்றால் சரிதான். எனது பட்டாவில் உள்ள விபரங்கள் ஒன்றுதான், எவ்வித மாற்றமும் இல்லை. அந்த கணினி பட்டாக்கள் **சா.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**